**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW1 – OS. No. 540/2023**

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கார்த்திகேயன் | தொழில் : |
| த/பெ. : திரு, பெருமாள் | வயது : 45 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். 9.3.2009 தேதிய எனது பெயரிலான கிரய பத்திரம் சான்றளிக்கப்பட்ட கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1.4.2010 முதல் 6.6.2019 வரைக்கான ஐ.சி.ஐ.சி.ஐ வங்கிக் கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 138/2019 பிராது உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரிலான சொத்து வரி ரசீதுகள் எண்ணிக்கை இரண்டு தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு எனது பெயரிலான தண்ணீர் வரி ரசீது தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு எனது பெயரில் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது எண்ணிக்கை இரண்டு தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்

138/2019 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.3.2024 ஐ.சி.ஐ.சி.ஐ வங்கிக் கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2024 ஆண்டிற்கான சொத்து வரி ரசீது கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2024 ஆண்டிற்கான தண்ணீர் கட்டண ரசீது தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.04.03 18:25:03 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

திருப்பூர்.